**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No. 102/2018**
**வழக்கு சாட்சி PW– 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பொன்னையா | தொழில் | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | இடைகால் | வயது | : | 54 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Friday of 03.07.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது கடையநல்லூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 14.01.2017 ம் தேதி, காலை 10.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, கடையநல்லூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஜெயலட்சுமி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை பதிவு செய்து, 11.00 மணிக்கு நிலையம் வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.12/2017, சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(1) இதச மற்றும் Sec 4 of TNPHW ACtன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் பாக்கெட் டைரி பராமரித்து வருவேன் என்றால் சரிதான். பாக்கெட் டைரியை ஆய்வாளரிடம் காண்பிப்பேன் என்றால் சரிதான். புகார்தாரருடன் மருத்துவமனையில் யாரெல்லாம் இருந்தார்கள் என்று நான் முதல்தகவல்அறிக்கையில் குறிப்பிடவில்லை. நோயாளி சுயநினைவுடன் இருந்தாரா? என்றால் சுயநினைவுடன் இருந்தார். புகார்தாரருக்கு காயம் எதுவும் இருந்ததா? என்றால் இருந்தது. புகார் வாக்குமூலம் நான் கைப்பட எழுதி புகார்தாரரிடம் கையொப்பம் பெற்றேன். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, புகார் வாக்குமூலம் என்னால் கைப்பட எழுதப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கைப்பட புகார் எழுதாததற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் கூறவில்லை.

நான் சொன்ன நாளில், நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.07.04 11:33:14 +0530